# BENEVOLENT IAS ACADEMY

1626A, Sri Vinayaga Complex, Avinashi Road, Hope College,
Peelamedu (PO), Coimbatore – 641004.
Cell: +91-9787731607/9787701067.
Web: www.benevolentacademy.com E-Mail:benevolentacademy@gmail.com

# DAILY IMPORTANT CURRENT AFFAIRS

# TNPSC Group I, II/IIA & IV

DATE: 08.04.2025

## 1) பிரதமர் மோடி இலங்கை பயணம்

- இலங்கை அதிபர் அநுரகுமார திசநாயகா (2024) - இவர் பதவியேற்ற பின் இலங்கைக்கு அரசு முறை பயணம் செய்யும் முதல் வெளிநாட்டு தலைவர் பிரதமர் மோடி ஆவார்.
- இந்தியா மற்றும் இலங்கை இடையே 7 ஒப்பந்தங்கள் கையெழுத்து ஆனது. அவையாவன,



  - மின்னோட்ட இணைப்பு (மின்சாரம் ஏற்றுமதி இறக்குமதி)
  - எண்ம தீர்வு பகிரும் ஒப்பந்தம் (**திருகோணமலையில் எரிசக்தி மையம்)**
  - இந்தியா, இலங்கை மற்றும் அரபு அமீரகம் ஒப்பந்தம் பாதுகாப்பு ஒத்துழைப்பு
  - இலங்கை வளர்ச்சிக்கு நிதி உதவி திட்டங்கள்
  - இந்திய மருந்து விதிமுறை ஆணையம் மற்றும் இலங்கை தேசிய மருந்துகள் ஒழுங்குமுறை அதிகார சபை புரிந்துணர்வு
  - சுகாதாரம் மற்றும் மருத்துவத்துறை ஒப்பந்தம்
  - மூன்று திட்டங்கள்
    - ✓ **திருகோணமலை சம்பூர் - சூரிய சக்தி ஆலை கட்டுதல்**
    - ✓ **தம்புள்ள பகுதி - வெப்ப கட்டுப்பாட்டு குளிர் பதனிடும் வளாகம்**
    - ✓ **5000 மத வழிபாட்டுத் தள மேற்கூரை சூரிய தகடுகள் நிறுவும் திட்டம்**

- இலங்கையின் மிக உயர்ந்த விருதான **"மித்ர விபூஷண விருது"** நமது பிரதமர் மோடிக்கு வழங்கப்பட்டுள்ளது.
    - இது தவிர 1960 - ல் குஜராத் ஆரவல்லி மலை தொடரில் கண்டெடுக்கப்பட்ட புத்தர் நினைவு சின்னம் இலங்கை கண்காட்சிக்கு அனுப்பப்பட உள்ளது.
- இலங்கை பிரதமர் - ஹரிணி அமரசூரிய

## 2) மூத்த பாலிவுட் நடிகர் மனோஜ் குமார் காலமானார்

- இவர் 1992 இல் பத்மஸ்ரீ விருதும், 2015ல் **தாதா சாகிப் பால்கே** விருதும் பெற்றுள்ளார்.
- 1965ல் இவர் நடித்து வெளியான, பகத்சிங் வாழ்க்கை வரலாற்றை அடிப்படையாகக் கொண்ட **"ஷாஹூத்"** திரைப்படத்தை அப்போதைய பிரதமர் லால் பகதூர் சாஸ்திரி பாராட்டியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

## 3) உலக சுகாதார தினம் - ஏப்ரல் 7

- Theme – **"ஆரோக்கியமான ஆரம்பம், நம்பிக்கையான எதிர்காலம்"**
- 1948 ஏப்ரல் 7-ல் உலக சுகாதார நிறுவனம் (WHO – WORLD HEALTH ORGANIZATION) அமைக்கப்பட்டதன் மூலம் ஏப்ரல் 7 உலக சுகாதார தினமாக கொண்டாடப்படுகிறது.
- இதன் தலைமையிடம் - **ஜெனிவா, சுவிட்சர்லாந்து**
- மேலும் இந்தியா 1977-ல் பெரியம்மையையும், 2014ல் போலியோவையும் முற்றிலும் ஒழித்தது.

## 4) சுதர்சன் பட்நாயக் பிரிட்டனில் சாண்ட் மாஸ்டர் (Sand Master) விருது

- பிரிட்டனில் நடந்த 2025 சர்வதேச மணல் சிற்பத் திருவிழாவில் சுதர்சன் பட்நாயக் இந்த **சாண்ட் மாஸ்டர் விருதை** பெற்றுள்ளார்
- இவர் பத்து அடி உயரத்தினால் ஆன விநாயகர் மணல் சிற்பத்தை "உலக அமைதி" என்ற கருத்துடன் உருவாக்கியுள்ளார்.
- இவரின் சொந்த மாநிலம் ஒடிசா

## 5) முதல்வர் திறனகம்

- தமிழ்நாட்டில் ஒக்கியம், துரைப்பாக்கம் - கண்ணகி நகர் திட்டப்பகுதியில் முதல்வர் திறனகம் ரூபாய் 2 கோடி மதிப்பில் 3000 சதுர அடி பரப்பில் அமைக்கப்பட உள்ளது.
- மேலும் வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை சார்பில் நவீன தொழில் பயிற்சி மையம் ஒன்றும் கட்டப்படும்.